பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Register as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர்: 135 | இதழ்: 16 | பக்கங்கள்: 08 | திகதி: 14-08-2011 | விலை: 15.00

# வரலாற்றை வடிவமைப்போம் வாருங்கள்!



**உலக இளையோர் தினத்தை முன்னிட்டு யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றிய இயக்குநர் அருட்பணி.ம.வி.இ. இரவிச்சந்திரன் அடிகள் அழைப்பு!**

எதிர்வரும் 21-08-2011 அன்று நடைபெற வுள்ள உலக இளை யோர் தினத்தை முன் னிட்டு யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றிய தலை வர் திரு ஜெ. றோசாய்றோ அவர்களும் இயக்குநர் அருட்பணி. ம.வி.இ. இரவிச்சந்திரன் அவர் களும் கையொப்பம் இட்டு விடுத்துள்ள அறிக்கையில் மேற்படி அழைப்பு விடுக் கப்பட்டுள்ளது. அவ்வறிக் கையில் : உற்சாகம், வீரம், துணிவு, மகிழ்ச்சி, நட்பு, தியாகம், அன்பு, காதல், சாதனை, வேகம் இவை யெல்லாம் இளமை என்ற ஒரு சொல்லில் அடங்கி விடுகிறது. அதேவேளை வன்முறை காமம், போதை, குழுமோதல், தற்கொலை, பொறுப்பற்ற நிலை போன் றவை இளமையின் மறு பக்கமாக சமூகத்தில் வலம் வருகின்றன. இத்தகைய பின்னணியில் தான் இளை யோரை வளப்படுத்துவதை ஊக்குவிக்கும் முகமாக உலக இளையோர் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வரு கின்றது.

ஐக்கிய நாடுகள் சபை 1985ம் ஆண்டை உலக இளையோர் ஆண்டாக பிர கடனம் செய்தது. அதை யொட்டி 1984ம் ஆண்டிலே அப்போதைய திருத்தந்தை திருச்சபை இளையோர் மட்டில் கவனம் செலுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்து உலக இளை யோர் தினத்தை முன் னெடுக்கும் மரபை உரு வாக்கினர் 1987ல் ஆரம் பிக்கப்பட்டு 2 அல்லது 3 ஆண்டுகளுக்கொருமுறை உலக இளையோர் தினம் திருச்சபையில் கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றது. மீண்டும் ஐ.நா உலக இளையோர் ஆண்டாக பிர கடனப்படுத்தியிருக்கும். இந்த ஆண்டிலே திருச் சபையும் தனது 13வது உலக இளையோர் நாளை அனுசரிக்கின்றது. ஸ்பெயின் நாட்டிலுள்ள மற்றித் நகரிலே இலட்சக்கணக் கில் கூடும் இளையோர் மத்தியில் திருத்தந்தை யவர்கள் பிரசன்னமாகி யிருந்து உறவாடும் நிகழ்வு இம் மாதம் 16ம்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## துன்ப துயரங்களிலிருந்து மேலெழுவதற்கு அன்னை மரியாவின் விசுவாசம் எமக்குத் தேவை

**சின்னமடுத்திருத்தலத் திருவிழாவில் குருமுதல்வர்**



கடந்த ஆகஸ்ட் 5ம் திகதி காலை 8.00 மணிக்கு சின்ன மடுத் திருத்தல திரு விழா கொண்டாடப்பட்டது. இத்திருவிழாத் திருப்பலியை தலைமை தாங்கி ஒப்புக் கொடுத்த யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருள்முனை வர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளே மேற்கண்டவாறு தமது மறையுரையில் கூறி னார்.

அவர் மேலும் கூறுகை யில் தூய மரியாவின் வாழ் வில் எல்லா நிகழ்வுகளிலும் ஆகட்டும் என்ற பிரமாணிக் கமே அவள் சந்தித்த துன் பங்கள் சவால்களின் வழி இறைவனின் தாயாக அவள் அடைய வாய்ப்பளித்தது.

அன்னை பிறரின் தேவை களை உய்த்துணரும் சிறப்பு, யேசு சொல்வத யெல்லாம் செய்யுங்கள் என எமக்கு கூறிய வார்த்தைகள் போன்ற வற்றை எமது வாழ்வாக் கும் போதுதான் அன்னை யின் பரிந்துரையும், ஆசீரும் எமக்கு நிறைவாகக் கிடைக் கும் என்றார்.

இத்திருப்பலியில் குடா நாட்டில் பல பங்குகளில் இருந்தும் இறைமக்களும், குருக்களும், துறவிகளும் பெரும் எண்ணிக்கையில் பங்குபற்றினர். திருநாளுக் குரிய அனைத்து ஒழுங் குகளையும் யாத்திரைத்தல பரிபாலகர் அருட்பணி. அருள்தாஸ் அடிகள் சிறப் பாக ஒழுங்கு செய்திருந்தார்.

## ஆயர் பேரவையின் பிரதிநிதிகள் தென் ஆபிரிக்கா விஜயம்



இனங்கள் மத்தியில் நல்லுறவை வளர்க்கும் பணி யின் அனுபவத்தை பெறுவதற் காக இலங்கை ஆயர்பேரவை யின் பிரதிநிதிகளாக ஏழு ஆயர் கள் கடந்தவாரம் தென்னா பிரிக்காவிற்கு விஜயம் செய் திருந்தனர்.

யூலை 25ம் திகதி முதல் ஆகஸ்ட் 1ம் திகதி வரை நடை பெற்ற இவ் ஒன்றுகூட லிலே ஆயர்கள் வியானி பெர்னான்டோ, வின்சன் பெர்னான்டோ, கரல் பெரேரா, நோபெட் அன்ராடி, கிங்சிலி சுவாம் பிள்ளை, இராயப்பு யோசெப் ஆண்டகைகளுடன் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை யும் கூட சென்றிருந்தார். ஆயர்களின் இவ் விஜயம் பற்றி எமது ஆயரிடம் கேட்ட போது அவர் கூறியது: முக்கிய இடங்கள் ஆகிய ஜொகனஸ் பேர்க்கேப் ரவுண், (நல்நம்பிக்கை முனை) டேர்பன் போன்ற பிரதான நகரங் களுக்கு விஜயம் செய்து இனங்கள் மத்தியில் நல் இணக்கத்தை கொண்டு வர உழைத்த பெரியார்களைச் சந்தித்து உரையாடி னோம் நடாத்தினோம். முதலில் எம் நாட்டின் இன்றைய நில மையை விபரித்து எவ்விதம் பெரும் பான்மையினரிடம் சிறுபான்மையினர் பிரிந்து நிற்பதைச் சுட்டிக் காட்டினோம்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## இலங்கை அரசு பெற்றிருப்பது போரின் வெற்றியேயன்றி அமைதியல்ல

இலங்கை அரசு போரை வென்றிருக்கலாம் ஆனால் அமைதியையல்ல என்பது மட்டுமல்ல, அது கடந்த காலங்களில் இருந்து கற் றுக் கொள்ள தவறியுள்ளது என குற்றஞ் சாட்டினார் எதிர் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் விஜித ஹெரத்.

மதத்தலைவர்கள், பொது நிலைப்பிரதிநிதிகள் மற்றும் அரசியல் தலைவர்களின் பங் கேற்புடன் நாட்டின் அமைதி குறித்து இலங்கையின் கத் தோலிக்க கரித்தாஸ் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த கூட் டத்தில் உரையாற்றிய பாரா ளுமன்ற அங்கத்தினர் விஜித, நாட்டின் நீடித்த அமைதிக்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## இலங்கையில் இரண்டு ஆண்டுகளில் 1700 பேர் கடத்திச் செல்லப்பட்டனர்

இலங்கையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 1700 பேர் கடத்திச் செல்லப்பட்ட தாக காவல்துறை தெரிவித் துள்ளது. 2009ம் ஆண்டில் 926 பேரும் 2010ம் ஆண் டில் 774 பேரும் கடத்தப்பட் டனர். இதில் 202 சம்பவங் கள் தொடர்பில் சந்தேகத் துக்குரியவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை. 275 சம்பவங்கள் தொடர் பில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித் துள்ளது.

## ஏமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

# இளைஞனே நில்

இன்றைய இளைய தலைமுறையினர் பற்றிப் பேசத் தொடங்கினால் வேதனையானது எனக் கூறும் சமூகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். 'காதில் தோடும், கையில் அலைபேசியும், அலைவதற்கு "பள்சருமே" (மோட்டார் சைக்கிளும்),' இன்றைய இளையோரின் வரைவிலக்கணம் என்பர் எம் பெரியோர்.

மக்களின் விடுதலை வாழ்விற்காக தம் உயிரையே வெடிப் பொறியில் பொருத்திய தியாகிகள் வாழ்ந்த பூமி இது. ஆனால் இன்று எவன் எக்கேடு கெட்டாலும் நான் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதே இளைய தலைமுறையின் தாரக மந்திரம். எனக்கு ஒரு நல்ல வேலை, கை நிறைய சம்பளம், நன்கு அதை அனுபவிக்க கேளிக்கை விடுதிகளும், மற்ற சமாச்சாரங்களும் இருந்தால் போதும் என வாழ்கின்றனர். தான் பிறந்த இந்த சமுதாயத்தைப் பற்றிச் சிந்திக்கவும் இதனைச் சற்று திரும்பிப் பார்க்கக்கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்கின்றனர். இதற் கேற்றாற்போல் "எங்கட பிள்ள" என்று செல்லமாக வளர்த்து அவனுக்கு சமுதாய சிந்தனையையும், பொதுவுடைமைக் கருத்தையும் புகட்டாமல் வளர்த்து வருகின்றனர் அவர்களது பெற்றோர்கள்.

நகரத்தின் மத்திய இடத்தில் மக்கள் நெருக்கடியாக வாழும் பகுதியில் விஜய் என்ற இளைஞன் வசித்து வருகிறான். அவன் தினமும் காலையில் ஏழு மணிக்கெல்லாம் அலுவலகம் செல்வது வழக்கம். வழக்கம் போல் அவன் போகும் வழியில் உள்ள ஒரு குழாயில் தண்ணீர் வீணாக ஓடிக்கொண்டு இருக்கிறது. அதை அடைத்து விட்டுச் செல்வதற்கு சுமார் இரண்டு நொடிகள் ஆகலாம். ஆனால் அவன் அதைச் செய்யவில்லை. அவனிடம் சென்று காரணம் கேட்டால், அது என்னுடைய பொறுப்பு அல்ல என்று பதில் வருகிறது. அந்த இடத்தில் நீர் தேங்கிக் கொசுக்கள் வளர்ந்து மலேரியா, டெங்கு போன்ற நோய்களும் தொடர்ச்சியாக வருகின்றன. சமூக பிரஜைகளான நாம் செய்யும் அலட்சியப் போக்கும் ஒரு காரணமே என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்று நம் முன்னோர்கள் சொன்ன பொதுவுடைமைக் கருத்து ஏன் காணாமல் போனது ? பொதுவுடைமைக் கொள்கையுடன் ஒன்றிப் பிறந்து வளர்ந்த நம் சமுதாயம் ஏன் இப்படி மாறிவிட்டது?

செய்யும் தொழிலில் கௌரவம் தேடி தகுதிக்கேற்ற தொழில் செய்ய தயங்கும் இளையோரும், செய்யும் வேலையை மறைத்து விட்டு தான் உயர்ந்த உத்தியோகம் பார்ப்பதாகப் பெருமை அடித்துக் கொள்கிறார்கள். ஏன் இந்த பொய்? எங்கே தொலைத்தாய் உனது உண்மை நிலையை? தான் செய்யும் தொழிலையே வெளியே சொல்ல வெட்கப்படும் இந்த இளைஞர்கள், எப்படி அந்தத் தொழிலைச் செய்து முன்னேறுவார்கள்.

உண்மை நிலையை போற்றுதல், பொய் கூறாமை, நன்னெறியில் வாழ்தல் இவையனைத்தும் நமது கலாசாரம் மற்றும் பண்பாடு அல்லவா? நம் முன்னோர்கள் இதைப்பற்றி நன்கு கூறிவிட்டு, அதன்படி வாழ்ந்தவர்கள் தானே! நாம் எங்கே தொலைத்தோம் அந்த வாழ்க்கை முறையை?

சந்ததிகளை பெருக்கி அவர்களுக்குச் சொத்துக்களை மட்டுமே சேர்த்து வைக்கும் பெற்றோர்கள் கலாசாரத்தையும், பண்பாட்டையும் இளம் சந்ததிக்கு கடத்த வேண்டும் என்பதை ஏன் மறந்துவிட்டார்கள்!

**ஈன்று புறந்தருதல் என் தலை கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்கு கடனே**
**நன்நடை நல்கல் வேந்தர்க்கு கடனே**
**வேல்வடித்து கொடுத்தல் கொல்லர்க்கு கடனே**
**ஒளிருவாள் அறிஞ்சமம் முறுக்கி**
**களிறெறிந்து பெயர்தல் காளைக்கு கடனே!**

என்ற அகநானூற்றுப் பாடலை அனைவரும் நினைவு கூறுவோமாக! பணம் மட்டுமே சேர்த்து பகட்டு வாழ்க்கை வாழாமல், நன்னெறிகளையும், பண்பாட்டையும் அடுத்த தலைமுறைக்கு கடத்த வேண்டும் என்ற கடமை உணர்வு நம் அனைவருக்கும் வரவேண்டும் என்பதே எமது நோக்கம்.

அருட்பணி. எஸ். எயின்சிலி றொஷான்

# அஞ்சலியகத்தில் தலைமைத்துப் பயிற்சி

இளவாலை சென் கென்றிஸ் மாணவத் தலைவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி பருத்தித்துறை அஞ்சலி அகத்தில் இயக்குநர் அருட்பணி. டேமியன் அடிகளார் தலைமையில் நடை பெற்றது.

சென்கென்றிஸ் அதிபர் அருட்பணி யேசுதாசன், உபஅதிபர் அருட்பணி றெஜீஸ் அ.ம.தி அடிகளாருடன் 35 மாணவத்தலைவர்கள் இரண்டு நாள் தலைமைத்துவப் பயிற்சியில் கலந்து கொண்டனர். 21-07-2011 மாலை ஆரம்பமாகி பயிற்சியில் ஆரம்ப, உரையாற்றிய டேமியன் அடிகள், சமூக மாற்றத்தின் முக்கிய தலைவர்களின் பண்பை வளர்க்கும் பணித்தளமாக பாடசாலைகளே திகழ வேண்டும். அதன் பொறுப்புள்ள தலைவர்களை உருவாக்குவதில் பாடத்திட்டங்களுக்கப்பால் சமூக, ஆன்மீக, நன்நெறிப்பண்புகளை வளர்க்கும் முன்மாதிரிகளே மாணவத்தலைவர்களாகும். உங்கள் உருவாக்கம் மூலம் எதிர்கால நற் சமூகத்தை காணும் பொறுப்புகளைக் கையளிக்க ஏற்படுத்தும் பயிற்சிகளே இவை இதற்கு அர்ப்பணிப்போடு வழிகாட்டும் வளவாளர்களின் நெறியாளர்கள் பாராட்டுக்குரியவர்களே என்றார்.

தலைமைத்துவ பயிற்சியில் ஆர்வமுடன் பங்கேற்ற மாணவத்தலைவர்கள் வழிகாட்டிய எழுத்தாளர் யோசப்பாலா, அஞ்சலியக அருட்பணி. விஜேந்திரன் குழுவினர், யோகா பயிற்சி மூலம் தியான வழிமுறைகளை யோகக்கலை ஆசானாகிய இரட்ணசோதி அவர்களின் வழிகாட்டலுடன் மாணவர்கள் கையெழுத்துச் சஞ்சிகையையும் வெளியிட்டு மகிழ்ந்தனர்.

# வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையேயான விளையாட்டுக்களில்

## சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு 14 பதக்கங்கள்

வடக்கு மாகாண மட்டப் பாடசாலைக்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி 14 பதக்கங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் 5 தங்கம், 7வெள்ளி, 2வெண்கலப் பதக்கம் குறிப்பிடத்தக்கது.

15 வயதிற்குட்பட்டோர் பிரிவில் 4X100M, 4X400M அஞ்சலோட்டத்தில் S.எலராஜ், R. ஜெனுசன், C.R. சிந்துஜன், N. லோகசீலன், A. ஜெரிக்சன், J. கொலின்ஸ் ஆகியோர் இரு பிரிவுகளிலும் முதலாம் இடத்தையும், 19 வயதிற்குட்பட்டோர் பிரிவில் 110M தடைதாண்டலில் C.மடோண் எல்விஸ் முதலாம் இடத்தையும், ஈட்டி எறிதல் W.C.L லிவிங்டன் முதலாம் இடத்தையும், 19 வயதிற்குட்பட்டோர் பிரிவில் கரம் போட்டியில் முதலாம் இடத்தையும் பெற்று 5 தங்கப் பதக்கங்களையும்,

15 வயதிற்குட்பட்டோர் பிரிவில் ஈட்டி எறிதலில் P.A. கில்மன்ராஜ் இரண்டாம் இடத்தையும், குண்டெறிதலில் J. அல்வின் இரண்டாம் இடத்தையும், 21 வயதிற்குட்பட்டோர் பிரிவில் 100M, 400M தடைதாண்டல் ஓட்டப்போட்டிகளில் J.P. எரிக் பிரதாப் இரண்டாம் இடத்தையும், முப்பாய்ச்சல் போட்டியில் A. அன்ரன் நிதர்சன் இரண்டாம் இடத்தையும், 15 வயதிற்குட்பட்டோர் கரம் போட்டியில் இரண்டாம் இடத்தையும், 19 வயதிற்குட்பட்டோருக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று 7 வெள்ளிப் பதக்கங்களையும்,

19 வயதிற்குட்பட்டோர் 100M ஓட்டப் போட்டியில் C.மடோண் எல்விஸ் மூன்றாம் இடத்தையும், 19 வயதிற்குட்பட்டோருக்கான உதைப்பந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தையும் பெற்று இரு வெண்கலப்பதக்கங்களையும் பெற்றுள்ளனர்.

# இலட்சக்கணக்கான ஏழைகளுக்கு அலைபேசி வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு ஐ.நா. முயற்சி

ஆபிரிக்கா மற்றும் தெற்கு ஆசியாவில் ஏழ்மையைக் குறைக்கும் நோக்கத்தில் முப்பது இலட்சம் ஏழைகளுக்குக் குறைந்த விலையில் அலைபேசி எண் வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு ஐ. நா ஆதரவுடன் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

ஐ.நா. ஆதரவுடன் மொவிற்று தொழில்நுட்ப நிறுவனம் இம்முயற்சியில் இறங்கியுள்ளது. குடும்ப உறுப்பினர்கள் அல்லது அண்டை வீட்டாருடன் ஒரே அலைபேசியைப் பகிர்ந்து கொள்வதற்குப் பதிலாக, குறைந்த விலையில் அலைபேசி வசதிகள் அமைத்துக் கொடுபபதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு. வருகின்றன.

ஒரு நாளைக்கு 2 டொலர் வரை வருமானம் பெறும் நூறு கோடிப் பேரின் வாழ்க்கைத்தரத்தையும் வருவாயையும் பெருக்குவதற்கு இத்தகைய அலைபேசிகள் உதவியாக இருக்கும் என எதிர்பார்க்கபபடுகிறது.

# உலக இளையோர் தினத்தையொட்டி பரிபூரணபலன்

இஸ்பெயினின் மத்ரித்தில் இம்மாதம் 16 முதல் 21 வரை நடைபெறவுள்ள 13வது (26 ஆண்டுகளிற்கு முன் ஆரம்பிக்கப்பட்ட) உலக இளையோர் தினத்தையொட்டி பரிபூரண பலனை அறிவித்துள்ளது அப்போஸ்தலிக்கப் பாவ மன்னிப்பு அலுவலகம்.

மத்ரித்தின் இவ் விளையோர் தினக் கொண்டாட்ட நாட்களில் திருப்பயண உணர்வுகளோடு கலந்து கொள்ளும் விசுவாசிகள் இப்பலனைப் பெறுவார்கள். அத்துடன் உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும் இந்த நிகழ்வில் ஆன்மீகரீதியில் பங்கு கொள்வோர் ஒவ்வொருவருக்கும் இப்பலனின் ஒரு பகுதி கிடைக்கும் என்று இந்த வத்திக்கான் அலுவலக அறிக்கை கூறுகிறது.

இந்த உலக இளையோர் தினத்தில் பக்தியுடன் கலந்து கொண்ட தங்களது பாவங்களுக்காக உண்மையிலேயே மனம் வருந்தி ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்று திருநற்கருணை உட்கொண்டு திருத்தந்தையின் கருத்துக்களுக்காச் செபிப்பவர்கள் இபபலனை அடைவார்கள்.

# பண்பாட்டுப் பாதையில் புத்துலகை நோக்கி

## யாழ் மறை மாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றியம்

### தேடல்

யாழ் மறைமாவட்டக் கத்தோலிக்க இளையோர் ஒன்றியம் உருவாக்கப்பட்டதன் பின்பு அது தன்னுடைய பயணப் பாதையை தான் சென்றடைய வேண்டிய இலக்கைத் தீர்மானிக்க வேண்டிய தேவை எழுந்தது. இதற்கான ஒரு தேடல் சென்ற ஆண்டிலேயே ஆரம்பமானது. சென்ற ஆண்டு மே மாதத்திலே எமது மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளிலிருந்தும் வருகை தந்திருந்த இளையோர் பிரதிநிதிகள் ஒன்றுகூடி எமது மறைமாவட்டத்தில் இளையோரின் இன்றைய நிலை, அவர்களுக்கான தேவைகள், சமகாலப் பணிகளின் போதாத்தன்மை போன்ற பல்வேறு விடயங்களையும் ஆய்வு செய்தனர். பின்பு அது அவர்களது அறிக்கையாக வெளியானது. இது பணித்திசையைத் தீர்மானிக்கும் முதல் படியாக அமைந்தது.

தொடர்ந்து இவ்வாண்டின் ஆரம்பப் பகுதியிலே தமிழ்நாட்டிலிருந்து அழைக்கப்பட்ட வளவாளர் திரு. ஆம்ஸ்ரோங் ராயன் அவர்களது

தேவைகள் தொடர்பான மேலதிக விளக்கங்களை எமக்குத் தந்தது. இவற்றையும் உள்வாங்கித் தொடர்ந்த எமது தேடல் பயணம், தெளிவான ஒரு பணித்திசையை எமக்கு பெற்று தந்தது. **"பண்பாட்டுப் பாதையில் புத்துலகு நோக்கி"** என்பது எதிர்வரும் சில ஆண்டுகளுக்கான எமது தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்றை வெளிப்படுத்தும் உயிர்ப்பு வாக்கியமாக வடிவமைக்கப்பட்டது. "இளையோரே எழுக! இறையாட்சி அமைக்க!" என்ற எமது ஒன்றியத்தின் விருதுவாக்கிற்கு வலுச் சேர்ப்பதாக இவ்வாக்கியம் வடிவமைக்கப்பட்டது. இவ்வாறு எமது சூழலில் வேரூன்றி நாம் செல்ல விரும்பும் ஒரு இலட்சியப் பயணம் உருவாக்கப்பட்டது. இப்பயணப் பாதையின் சுருக்கக் குறிப்பு கீழே தரப்பட்டுள்ளது. இப்பாதையில் பயணிப்பதற்குத் தேவையான அமைப்புக்கள் படிப்படியாக உருவாக்கப்பட்டு வருகின்றன. பங்குமட்டக் கருத்தரங்குகள், மறைக்கோட்ட மட்ட தலைமைத்துவப் பயிற்சி போன்றன இவ்விலக்குடனேயே மேற்கொள்ளப்படுகின்றன. "விடியல்" இசைக்குழு இந்நோக்கோடே உருவாக்கப்பட்டு இதுவரை 10 பங்குகளில் நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளது. மேலும் கலைக்குழு, பொருளாதாரக் குழு, இளம் வளவாளர் குழு, இளையோர் நலப்பணியாளர் குழு என்பன உருவாக்கப்பட்டுள்ளன.

இப்பயணப் பாதையில் எமது இளையோர் ஒன்றியம் தொடர்ந்து பயணிக்க பல இளையோர்களை இறையாட்சியின் வழியில் நடக்கச் செய்ய மேற்கொள்ளப்படும் இத்தகைய முயற்சிகளுக்கு உங்களுடைய உதவிகளைக் கோரி நிற்கின்றோம். ஆலோசனைகளாலும், உதவிகளாலும் எம்மோடு கரம் இணைக்க அன்போடு அழைக்கின்றோம்.

### இன்றைய சூழல்

அரசியல் நிலை -
தீர்க்கமான தலைமை இல்லை-
பிளவுகள்-
இலக்குகள் தெளிவு இல்லை.
நடைமுறைத்திட்டங்கள் இல்லை.
மக்களில் இருந்து அந்நியம்,
மக்களைச் சுரண்டல்

**சமூகநிலை**

சாதிப் பிளவுகள்
ஏற்றத்தாழ்வுகள்
பெண்களுக்கு எதிரான செயற்பாடுகள்
சமூக அமைப்புக்கள் பலவீனம்
சமூகத்தலைவர்கள் இல்லை. சுயநலத் தலைமை.

**பண்பாட்டு நிலை**

விழுமிய வீழ்ச்சி
தொடர்பூடக சீரழிவு
கலை, இலக்கிய ஆர்வமின்மை
அந்நிய கலாச்சார மோகம்

**பொருளாதார நிலை**

தங்குநிலை பொருளாதாரம்
வளச்சுரண்டல்கள்
வேலைவாய்ப்பு இன்மை
உற்பத்தி முயற்சிகள் இன்மை
தொழில்துறை சாராத கல்வி முறை

மொத்தத்தில் தமிழராக எமது வாழ்வியல் கேள்வியாகி நிற்கின்றது.

தேவை ஒரு புதிய பயணம்

யார் முன்னெடுப்பது?
எங்கு செல்வது?
எப்படிச் செல்வது???

யார் முன்னெடுப்பது?

இளையோர்கள்

**இளையோரின் இன்றைய நிலை**

அதிக சுதந்திரத்தைத் தேடுகின்றார்கள்
அதிகம் கட்டுப்படுத்தப்படுவதாக உணர்கின்றார்கள்
பிளவுபட்டிருக்கின்றார்கள்
வேலை வாய்ப்புக்கள் இன்றியிருக்கின்றார்கள்
மற்றவர்களில் தங்கியிருக்கின்றார்கள்.
ஆகவே பயன்படுத்தப்படுகின்றார்கள்
கிராமப்புற, புறநகர் இளையோர் கல்வி வசதி மறுக்கப்படுகின்றனர்
சுயதொழிலில் ஆர்வமின்றி காணப்படுகின்றனர்
கருத்து, பேச்சு சுதந்திரமின்றி காணப்படுகின்றனர்
சமூக விழிப்புணர்வின்றி காணப்படுகின்றனர்

**இளையோரின் பலங்கள்**

ஆற்றல்கள்
திறன்கள்
நவீன அறிவு
தொழில்நுட்பங்கள்
கனவுகள்
ஆக்கத்திறன்
கற்பனை சக்தி
உணர்வு ரீதியான ஈடுபாடு
தொடர்பாடல் திறன்

**எங்கு செல்வது?**

ஒரு புதிய சமூகம்
மனித மாண்பு மதிக்கப்படும்
சமத்துவமான
சகோதரத்துவமான
பன்மைத்தன்மை கொண்ட
நீதி நிலைநாட்டப்பட்ட
உரிமைகள் மதிக்கப்படுகின்ற
அனைவருக்கும் வளமான
வாழ்வு கிடைக்கின்ற
**ஒருவர் ஒருவருக்காக வாழுகின்ற ஒரு உன்னத சமுதாயம்**
**இறையரசு**

## நாம் உருவாகிறோம்:- உருக்கொடுக்கின்றோம்...









பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



## இளமை இருக்கும் போதே

எங்கே ஆற்றலின் சக்தி வெளிப்படுகின்றதோ
எங்கே புதிய சரித்திரம் ஒன்று வரையப்படுகின்றதோ
எங்கே மனிதம் காக்கப்படுகின்றதா
எங்கே புதிய படைப்பாக்கம் விரிகின்றதோ
எங்கே சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகள்
களையப்படுகின்றனவோ
எங்கே பெண் விடுதலை பேசப்படுகின்றதோ
எங்கே தியாகத்தால் வரலாறு வரையப்படுகிறதோ
அங்கெல்லாம் இளையோரின் தடம் பதியப்பட்டிருக்கும்
ஆம் இளமை இருக்கும் இடத்தில்தான் இலட்சியமும்
குடிகொண்டிருக்கும்



தவமாக உருவெடுத்து தாய் வயிற்றில்
தனித்திருந்து
உன்னை
சான்றோன் எனக் கேட்டிருப்பாள்
நீ பூவாக மலர்ந்தபோது

### மலர்தல்





மலர்ந்து மணம் வீசத்தொடங்கும் போது
வண்டுகள் பூவை நோக்கி வருவது
இயல்புதானே
கடந்து போக முடியாத காட்டாற்றுப்
பருவம் இது

### காதல்



வாழ்வு அடுத்த சந்ததியால் தொடங்கும்
போது குடும்பம் அடித்தளம் இடுகிறது
நாளைக்காக
அப்போ சமுதாயம் விரிகிறது.
சரித்திரம் விரிகிறது
சகாப்தம் விரிகிறது.

### விரிதல்

எழுமின்
எழுமின்
இலக்கு அடையும் வரை
தயக்கம் கொள்ளாது
தடைகாணாது
தளர்வு இல்லாது
தொடர்ந்து பயணித்திடு
துணிந்து ஓடிடு.
தோள்கள் நிமிர்ந்திருக்கும் போது
தங்கள் இதயங்களில்
தங்கள் இலட்சியங்கள்
இருக்கும் போது மாத்திரம்
"எழுமின்" தொடங்குகிறது.



### எழுதல்

சுடும் வரை நெருப்பு
சுழலும் வரை பூமி
போராடும் வரை மனிதன்
இளையோனே
நீ
மனிதன்
உன் மீது வீசப்படும்
சகதிகளைக்கொண்டு
உன் வீட்டை சாந்து
பூசிக் கொள்
உன்னை
அழுக்குப்படுத்த எவராலும் முடியாது



### மோதல்



புரியாத புதிர்களுக்கு
விடைகள் கிடைக்கும் போது
படைத்தல் நிகழ்கிறது
மாற்றங்கள் மறுமலர்ச்சியாய்
புதிதாய் புத்தாக்கமாய்
புலப்படும்போது
படைத்தல் நிகழ்கிறது.

### படைத்தல்



இயற்கை நியதிகளில்
நிச்சயமானது
மரணம்
மூச்சு இருக்கும் வரை
முயன்று கொண்டிரு
முடியுமானால்

### சாதல்



சாதல்
சாதாரணமானது
அது
இயற்கையானதும்
கூட
ஆனால்
சரித்திரத்தில்
உயர்தல்
என்பது
அது இளையோருக்குரியது

### உயர்தல்

## உலக இளையோர் தினம்

உலக இளையோர் தினம் என்பது திருச்சபையில் இடம்பெறும் பாரிய சமய கலாச்சார நிகழ்வாகும். இன்றைய இளையோர்கள் கிறிஸ்துவுடைய செய்தியை அறிவதையும், வாழ்க்கை பற்றிய உயர்வான விடயங்களைக் கற்றுக் கொள்வதையும் நோக்கமாகக் கொண்டு இது நடாத்தப்படுகின்றது. கத்தோலிக்கத் திருச்சபையால் நடாத்தப்படுகின்ற மிகப் பெரும் சர்வதேச நிகழ்வு இதுவாகும். இந்நிகழ்வை திருத்தந்தையே ஒழுங்கமைக்கின்றார். முதல் தடவையாக 1987ம் ஆண்டு ஆர்ஜென்டீனாவிலே அப்போதைய திருத்தந்தையாக இருந்த 2ம் யோவான் போல் அவர்களால் இது ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்பு இரண்டு ஆண்டுகள் அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை இது நடைபெற்று வருகின்றது. இறுதியாக 2008ம் ஆண்டு ஆடி மாதம் அவுஸ்ரேலியாவில் இது நடைபெற்றது.


11வது தடவையாக இவ்வாண்டு ஆவணி மாதத்தில் ஸ்பெயினில் உள்ள மற்றித் என்ற நகரத்தில் இது நடைபெறுகின்றது. உலகெங்கும் இருந்து கூடிவரும் இளையோர்கள் திருத்தந்தையோடு ஒரு வார காலத்தை செலவிடுவார்கள். வழிபாடுகள், பல நிகழ்வுகள், ஆயர்களினால் நடாத்தப்படும் இளையோருக்கான மறைக்கல்வி வகுப்புகள் போன்ற கலைநிகழ்வுகள் இந்த நாட்களில் இடம் பெறும். இவ்வாண்டுக்கான மையப் பொருள் **"கிறிஸ்துவில் வேரூன்றியவர்களாகவும், நம்பிக்கையில் உறுதியோடும் ."** என்கின்ற தூய பவுலடிகளாரின் வார்த்தைகளாகும். (கொலோ 2:7)

இதுவரைக்கும் நடந்த சர்வதேச இளையோர் தினங்களிலே பிலிப்பியன்ஸில் நடைபெற்ற நிகழ்விலே மிக அதிகமான இளையோர்கள் பங்குபற்றியிருந்தனர். ஐம்பது லட்சம் இளையோர்கள் மனிலாவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஒன்றுகூடியிருந்தனர்.

## இவ்வாண்டுக்கான இளையோர் தின நிகழ்வுகள்

- ஆகஸ்ட் 11 - 15 வரை மறைமாவட்டங்களில் செலவிடப்படும் நாட்கள் (இந்நாட்களில் உலகெங்கும் இருந்து வரும் இளையோர்கள் ஸ்பெயினிலுள்ள பல்வேறு மறைமாவட்டங்களில் உள்ள இளையோர்களைச் சந்தித்து அவர்களோடு பண்பாட்டுப் பகிர்வு நிகழ்வுகளில் பங்குபற்றுவர்.
- ஆகஸ்ட் 16 காலை 8.00 மணிக்கு உலக இளையோர் தின ஆரம்பத் திருப்பலி கருதினால் அந்தோனியோ மரியா அவர்களால் ஒப்புக்கொடுக்கப்படும்.
- ஆகஸ்ட் - 18 காலை 7.00 மணிக்கு திருத்தந்தை அவர்கள் ஆடம்பரமாக வரவேற்கப்பட்டு ஆரம்ப நிகழ்வு இடம்பெறும்.
- ஆகஸ்ட் - 10 திருத்தந்தை அவர்களின் தலைமையில் இளையோருக்கான திருச்சிலுவைப்பாதை இடம்பெறும்.
- ஆகஸ்ட் - 20ம் திகதி மாலை 8.00 மணிக்கு திருத்தந்தை தலைமையில் இளையோருக்கான திருவிழிப்பு இடம்பெறும்.
- ஆகஸ்ட் - 21ம் திகதி காலை 9.00 மணிக்கு திருத்தந்தை தலைமையில் இளையோர் தின விழாத் திருப்பலி நடைபெறும். இத்திருப்பலி நிறைவிலே அடுத்த ஆண்டுக்கான உலக இளையோர் தினம் கொண்டாடப்படும் இடம், நாட்கள் என்பன அறிவிக்கப்படும்.

WORLD YOUTH DAY MADRID 2011
MADRID11.COM



## பங்குகளில் வலம் வரும் இளையோர் சிலுவை

தாம் ஆரம்பித்த உலக இளையோர் தினத்தை முன்னிட்டு திருத்தந்தை 2ம் ஜோணபோல் அவர்கள் 1984ம் ஆண்டு இளையோரின் கையில் பெரியதொரு திருச்சிலுவையை ஒப்படைத்தார். உலக மீட்பின் சின்னமான சிலுவையை இளையோரைத் தாங்கிச் செல்ல அழைத்த அவர் பலர் சிலுவையைத் துன்பத்தின் குறியீடாகப் பார்கின்றனர் ஆனால் அது இறையன்பின் குறியீடு என்று விளக்கினார். இறைவன் மனிதன் மட்டில் எத்தகைய அன்பு கொண்டுள்ளார் என்பதையும் மனிதன் மனிதன் மட்டில் எத்தகைய அன்பைக் காட்ட வேண்டும் என்பதையும் ஒருங்கே குறித்து நிற்பதாக சிலுவை அமைகிறது. அன்றிலிருந்து இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் உலக இளையோர் தினத்தை முன்னிட்டு இச்சிலுவை உலகின் பல நாடுகளுக்கும் இளையோரால் தாங்கிச் செல்லப்பட்டு வருகின்றது.

இம்மரபை கருத்தில் கொண்டு எமது மறைமாவட்டத்திலும் இவ்வாண்டு இளையோர் சிலுவை வலம் வரத் தொடங்கியுள்ளது. தீவகத்தில் சின்னமடு ஆலய திருவிழாவன்று எமது குருமுதல்வர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் தீவக இளையோர் ஒன்றிய தலைவரிடம் சிலுவையை ஒப்படைத்து இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். தீவக இளையோர் ஒன்றியத் தலைவர் செல்வன் டயஸ் அவர்கள் நாரந்தனை இளையோர் ஒன்றியத் தலைவரிடம் மேற்படி சிலுவையை ஒப்படைத்தார். இப்போது இச்சிலுவை தீவகப் பங்குதோறும் பவனி வருகின்றது.

பருத்தித்துறை மறைக்கோட்டத்தில் மறைக்கோட்ட இளையோர் இயக்குநர் அருட்பணி எமில்போல் அவர்களும் இளையோர் ஒன்றியத் தலைவி செல்வி சோபி தலைமையிலான குழுவினரும் தமது மறைக்கோட்டத்துக்குரிய சிலுவையை சாவகச்சேரி பங்குக்கு எடுத்துச் சென்று ஒப்படைத்தனர். ஆவணி முதலாம் திகதியிலிருந்து பருத்தித்துறை மறைக்கோட்ட பங்குகள் தோறும் இச்சிலுவைப் பவனி வர ஆரம்பித்துள்ளது.

யாழ் மறைக்கோட்டம், வன்னி மறைக்கோட்டம் ஆகியவற்றில் ஆவணி 7ம் திகதியிலிருந்தும் இளவாலை மறைக்கோட்டத்தில் ஆவணி 10ம் திகதியிலிருந்தும் இச்சிலுவை யாத்திரை நடைபெற்று வருகிறது.

ஒரு பங்கு இளையோர் ஒன்றுகூடி இச்சிலுவையைத் தாங்கிச் சென்று அயல் பங்கு இளையோரிடம் ஒப்படைக்கின்றனர். இவ்வேளையில் இம்மன்றங்கள் இணைந்து வழிபாடு, ஒன்றுகூடல், மகிழ்பொழுது, தேநீர் விருந்து என சிறப்பிக்கின்றனர். பங்குத்தந்தையர்கள் தமது வேலைப்பளுக்கள் மத்தியிலும் இந்நிகழ்வை சிறப்பாக ஒழுங்கமைத்து வருகின்றனர். பங்கு மட்டங்களில் சிறந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் இந்நிகழ்வு ஆவணி 21ம் திகதி யாழ் நகரில் இடம் பெறும் இறுதி நிகழ்வில் நிறைவடையும்.

# குரலற்றவர்களின் குரலாக ... ?

## பாடகர்களாக மாற விரும்புபவர்களுக்கு

யுத்தத்தின் பின்னரான புற்றீசல் வெளிப்பாடாய் வட பகுதியில் பல விடயங்கள் முளைக்கத் தொடங்கியிருப்பதை நாம் அறிவோம். சவப்பெட்டிக்கடை திறப்பதைத் தவிர ஏனையவை தாராளமாக விஸ்வரூபம் எடுத்து வருகிறது. இதில் "மியூசிக் குறுாப்" என அழைக்கப்படும் கோஷ்டிகளைப்பற்றி பேச வேண்டியிருக்கிறது. பொதுவாக இசையை இறை வடிவம் எனக் காணும் போக்கு உண்டு. அதேவேளை இசை என்பது அழகியல் சார்ந்த நெறிமுறையானது என்ற கருத்துருவாக்கமும் உண்டு. இரண்டும் சரிதான் ஆனால் இசைக்கோலம் என்பது ஒருவரிடத்தில் ஆளுமை உருவாக்கத்தை ஏற்படுத்துவதோடு வலிமையான சாதனமாகவும் உள்ளது என்பதை நம்மில் பலர் மறந்து விடுகிறோம். அதேவேளை பாடல் இசை என்பது தென்இந்திய திரைப்பட இசை அல்லது கைக்குக் கிடைக்கக்கூடிய பாடல்கள் மாத்திரம் என்று நிலவுகின்ற பெரும்போக்கும் உண்டு.

இத்தகைய ஆழமற்ற வணிக நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்து வருபவைதான் இன்றைய 'மியூசிக் குழுக்கள்' என்று கருத வேண்டியிருக்கிறது. மகிழ்ச்சியையும் பொழுதுபோக்கையும் வழங்க தாம் பாடுகிறோம் என்றே நம்மில் பலர் கருதிக் கொண்டு பாடுகிறார்கள். ?

**ஆனால் பாடல்கள் எப்படிப்பட்டவை?**
**அதன் உள்ளடக்கம் என்ன?**
**ஆழமான சமூகக் கருத்துக்கள் உள்ளனவா?**
**இப்பாடல்கள் மீண்டும் மீண்டும் கேட்கப்படும் போது யாது நிகழுகின்றது?**

இத்தகைய வினாக்கள் எதுவுமின்றி ஓர் பிரமாண்ட முன் இசையோடு பாடல் தொடங்க, பார்வையாளர் மத்தியில் விசில் சத்தத்துடன் புழுதி கிளம்பத் தொடங்குகிறது. இடைவெளி எதுவுமின்றி தொடர் இசையாக பாடலாக மாறுகிறது.

என்னிடம் எப்போதும் எழுகின்ற கேள்வி எல்லாம் இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுகிறவர்களிடம் வருமான ஈட்டலுக்கப்பால் "சமூகப் பொறுப்பு" தேவையில்லையா? என்பதே.

இசையின் வடிவம் வெறுமனே இரசனை நுகர்வுக்கு அப்பால் பல்வகைப் பயன் பாட்டுத்தன்மையை கொண்டுள்ளது என்பதை அறியாதவர்கள் தான் ஏராளம்.யுத்தம் பேரழிவை ஏற்படுத்தி இனத்தின் ஆணிவேர்வரை அசைந்துள்ளது. மறுபுறம் இருப்பின் நுனியில் வாழ்வைப் பற்றிப் பிடித்து மிஞ்சிய மக்களை படிப்படியாக சிதைக்கின்ற வழிமுறைகள் வழிநெடுக வந்துள்ளன. இதில் மிகப் பரிதாபமும் ஆபத்தும் என்னவென்றால் நம்மவர்களின் இத்தகைய ஆடல்பாடல் அபிநய இணைப்பு, உறவுப் பரிமாற்ற பணிகளில் ஊடுருவி ஆழமாக நிற்பவை பற்றி எவரும் யோசிப்பதில்லை. குறிப்பாக திடீர் இணைப்பு வீதி உலாக்கள் தரும் விளைவுகள் எவை? அவற்றில் பங்களிப்பதன் மூலம் எமது சமூகத்திற்கு நாம் எவற்றை வழங்குகின்றோம்?

அதிக பாடல்கள் பாட வேண்டும் அதிக குழுக்களிடம் பாட வேண்டும் புதிய பாடல்கள் பாட வேண்டும் அடுத்தவனை விழுத்தி முன்னுக்கு வரவேண்டும் என்பதோடு மறுபுறும் நேர ஒழுங்கு, முன்பயிற்சி, கூட்டுச் செயற்பாடு, தட்டிக்கொடுத்தல், கீழ்படிதல் போன்றவை இல்லாத "வெற்றுப்பாடகராக" இருக்கின்ற அவலநிலை. பாடகர்களுக்கென்று எவ்வித சமூகப்பொறுப்பு, சமூகப்பிரக்ஞை தேவை இல்லை என்ற மனோபாவத்தோடு பாடல் வழங்கும் இயந்திரமாக பலர் இருக்கின்ற நிலை பரிதாப நிலையாகும்.

தம்மிடம் பாட வருபவர்கள் சுருதிக்கும் தாளத்துக்கும் அச்சுப் பிசகாமல் பின்இசைக்குப் பாடி வருமானப் பெயர் வாங்கிக் கொடுத்தால் சரி என்கின்ற மனநிலை மாத்திரம் அதன் உரிமையாளர்களிடம் எஞ்சியிருப்பதால் "பாடகர்களின் உருவாக்கம்" அவர்களின் திறன்கள் மாத்திரம் குவிகின்றன. அவர்களிடம் உருவாக வேண்டிய ஆளுமை, கூட்டுச் செயற்பாடு, சமூகப்பொறுப்பு பற்றிய விடயங்கள் புறந்தள்ளப்படுகின்றன. இதனால் எஞ்சுவதெல்லாம் பாடல்களைப் பாடமாக்கி அப்படியே ஒப்புவிக்கின்ற வெற்றுப் பாடகர்களே.

**ஈடுபடுகின்ற ஒவ்வொரு ஆக்க இலக்கிய மற்றும் அழகியல் முயற்சிகளில் நமக்கென பாதை, சமுதாய நேசிப்பு, மனிதநேய விருப்பு, இனத்துவ அடையாளம் என்ற பரந்துபட்ட உருவாக்கங்கள் நிகழும் போதெல்லாம் மாத்திரமே நமது சூழலில் குரலற்றவர்களின் குரலாக குறிப்பாக பாடகர்களாகிய நாம் மாறமுடியும்.**

**உலகத்தின் செவிகளில் ஓங்கி ஒலித்த**



மீண்டும் மீண்டும் அரசியல் வாதிகளிடம் ஏமாந்து போகிறோம் என அஞ்சுகிறோம். அதிகாரங்களுக்கெதிராக குரலை உயர்த்தினால் ஒரு துப்பாக்கிக் குண்டு நமது குழந்தைகளை அநாதைகளாக்கி விடும் என்று அஞ்சுகிறோம். அன்றாட வாழ்வில் அச்சமமென்பது நிழலைப் போல் நம்மைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. வாழும் காலத்திலேயே இறந்து விட்டவர்கள்

(பீலா அனிகுலபோகுட்டி



ணத்தால் வாழ்க்கையை வாங்க முடியாது. அரசியல் வாதிகளின் சலுகைகளை ஒருபோதும் அனுமதியாதீர்கள். அதன்வழி உங்களை என்றென்றைக்கும்

(பாப்மார்லி - ஜமேக்கா)



நான் எனது மக்களுக்காகப் பேசுகிறேன். எந்த மக்களில் இருந்து நான் வந்தேனோ அந்த மக்களுக்காக நான் பேசுகிறேன். என்னுடைய நோக்கம் வாழ்வு நம்பிக்கை யாவும்

(பால்ராப்சன் - அமெரிக்கா)




நான் ஒரு இசைக்கலைஞராக இல்லாதிருந்தால் பல லட்சம் தமிழ் மக்களுடைய குரல்களைப் போலவே என்னுடையதும் உலகின் செவிகளில் விழாது

(மாதங்கி அருட்பிரகாசம் -



கலைஞன்
சார்பு நிலை
கொண்டிருத்தல்
வேண்டும்.
அவன்
அடிமைத்தனம்,
விடுதலை
இரண்டில்
ஒன்றைத்
தேர்ந்தெடுக்க
வேண்டும்.
நான்
எனக்குரியதைத்
தேர்ந்து
கொண்டேன்.
மாற்றுத்
தெரிவுகள்
ஏதமில்லை.
(பால்ராப்சன்)



ஆற்றிலே தெளிந்த தண்ணீர் ஓடியது. அதன் கீழ் நிறைய பாறைகள். பாறைகளின் மேல் பல ஆயிரக்காணக்கான பூச்சிகள் ஒட்டிக் கொண்டிருந்தன. அதிலிருந்து வெளிவர எந்தப் பூச்சிக்கும் தெரியவில்லை.

ஒரு பூச்சி மட்டும் துணிந்து பாறையை விட்டது. வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. உருண்டது. புரண்டது. எதிர்த்து நீச்சலடித்தது. கடைசியில் தண்ணீருக்கு மேலே வெளியே பறந்தது. என்ன அழகான காட்சிகள்! வளைந்து நெளிந்து செல்லும் ஆறு. அருகில் பசுமையான புல்தரை, மரங்களடர்ந்த மலைகள், மேகக் கூட்டங்கள், நீலவானம் என்று எவ்வளவு அழகு! உல்லாசமாகப் பறந்துதிரிந்தது அந்தப்பூச்சிப் பறவை. மற்ற பூச்சிகள் எல்லாம் ஆற்றின் தண்ணீர் மீது பறந்த பறவையைப் பார்த்தன. அது அழகாக இருந்தது. அக்காட்சியை ஆற்றுக்குள் பாறையைப் பிடித்துக் கொண்டிருந்த பூச்சிகள் எல்லாம் ரசித்தன. ஆனால்அவற்றால் தண்ணீரை விட்டு, பாறையை விட்டு வெளியே வர இயலவில்லை!

எதையும்
எதிர்கொள்ளுவதற்குத்
தயாராகும் போதுதான்,
இந்த உலகின் அழகு
நமக்குப் புரிகிறது.

பாதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# இளையோர் பணி சிறக்க : முன்மொழிவுகள்

**யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றுகூடல் : 2010கருத்துப் பரிமாற்றத் தொகுப்பு**

### இளையோர் விழிப்புணர்வு

இளையோர் தமது கடமைகள் பற்றிய விழிப்புணர்வைப் பெற்றுக் கொள்ள மர்தாந்த நிகழ்வுகளை கருத்தரங்குகளை பங்கு, மறைக்கோட்ட, மறைமாவட்ட மட்டங்களில் நடாத்துதல். இவற்றில் போதைப்பொருள் பாவனை, ஆரோக்கியமான பாலியல், தலைமைத்துவம், உளவியல் விடயங்கள் போன்றவற்றிற்கு முன்னுரிமை வழங்கல்.

### இளையோர் ஆன்மீகம்

ஆன்மீக ரீதியாக அவர்கள் விழிப்படைய தியானங்கள் மற்றும் இளையோருக்கான சிறப்பு வழிபாடுகளை ஒழுங்குபடுத்தல்.

### பெற்றோர் பெரியோருக்கான விழிப்புணர்வு

இளையோரைப் புரிந்து கொண்டு வழிப்படுத்தும் விதம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய திட்டங்களை பங்குமட்டத்தில் பெற்றோர் பெரியோருக்கு நடாத்துதல்.

### பங்கில் இளையோரின் பங்கேற்பை அதிகரித்தல்

ஆலய/பங்கு அருட்பணிச் சபைகளில் இளையோருக்கும் போதிய உறுப்புரிமை அளித்தல். மறைக்கல்வி, திருப்பாலத்துவசபை, கல்விச் செயற்பாடுகள், பக்திச் சபைகள் போன்றவற்றில் அவர்கள் ஆர்வத்தோடு பங்குபற்றத் தூண்டுதல். அவர்களுடைய ஈடுபாட்டை அதிகரிக்கக் கூடிய விளையாட்டு, கலை, பொழுதுபோக்கு வசதிகளைப் பங்கில் ஏற்படுத்தல். பங்குத் தந்தையர்கள் மறையுரை மூலமும் ஞாயிறு திருப்பலியின் முடிவிலோ அல்லது வேறு நேரங்களிலோ இளையோரை நேரடியாக சந்தித்தும் கலந்துரையாடி உரிய வழிகாட்டுதல்களை வழங்குதல், மன்றங்களை உருவாக்கி வழிநடத்துதல்.

### வேலைவாய்ப்பு

கணனி மற்றும் தொழில் சார் பயிற்சிகளை இளையோருக்கு வழங்கி அவர்கள் வேலைவாய்ப்புக்களை பெற வழிகாட்டுதல். மேலும் தொழில்சார் வழிகாட்டல் கருத்தரங்குகளை நடாத்துதல். தொழில் முயற்சிகளுக்கு உதவியைப் பெற்றுக் கொடுத்தல்

### ஏனைய இளையோர் அமைப்புக்களோடு உறவு

பங்கிலுள்ள இளையோரை அயல் பங்குகளுக்கோ வேறு பங்குகளுக்கோ அழைத்துச் சென்று உறவு கொள்ளவும் உரையாடல்கள் மூலம் புரிந்துணர்வையும் செயற்பாடு களையும் வளர்த்துக் கொள்ளவும் உதவுதல்.

### சமூக விழிப்புணர்வுச் செயற்பாடு

இளையோரின் துணையோடு மறையறிவு, மது ஒழிப்பு, சமூகச் சீர்கேடுகளை நீக்கல் போன்ற விடயங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய செயற்பாடுகளை பங்கு மட்டத்தில் நடாத்துதல். இவ்வாறு ஈடுபடுத்தப்படும் போது இளையோர் சமூகத்தையும் விழிக்கச் செய்து தாமும் விழிப்புணர்வு அடைவர்.

### போரினால் பாதிக்கப்பட்ட இளையோர் மட்டில் சிறப்புக் கவனம்

போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டு அங்கவீனம் ஆனர்கள் உறவுகளை இழந்து வருந்துபவர்கள், சிறைகளில் வாடுபவர்கள் இவர்கள் மட்டில் சிறப்புக் கவனம் செலுத்தி அவர்கள் ஆறுதலும், உதவியும், விடுதலையும் பெற முயற்சிக்க வேண்டும்.

### இளையோர் செய்ய வேண்டியவை

**தமக்கு வழங்கப்படும் சந்தர்ப்பங்களை ஆர்வத்தோடு பயன்படுத்தி தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும்.**
**சக இளையோரின் தனிமை விரக்தியிலே துணையாக இருக்க வேண்டும்.**
**பொறுப்புக்களை ஏற்று செயற்பட முன்வர வேண்டும்.**
**பொறுப்புணர்வோடு செயற்பட வேண்டும்.**
**தாம் ஒற்றுமையுடன் செயற்பட்டு எப்போதும்**
**இறையாட்சி விழுமியங்களை முன்னெடுக்க தயாராக இருக்க வேண்டும்.**



# வாழ்ந்து பார்க்லாமே (இலட்சியங்களோடு வாழும் இளையோருக்கு மாத்திரம்)

வாழ்வினை தனித்துவமாக வாழ ஆரம்பிக்கும்போது மாத்திரமே பிரச்சனைகள் நம்முன்னே விரிகின்றன என்கிறார் பிரபல உளவியலாளர் எதிர்கொள்பவர் மாத்திரமே ஏற்றம் பெறுகின்றனர். உடைந்து போதல் என்பது தனித்து மட்பாண்டங்களுக்கு மாத்திரம் அன்று அது மனிதர்களுக்கும் பொருத்தமானதே. ஆனால் தான் உடைகிறேன். தனது உணர்வுகள் உடைகின்றன. இதனால் ஆளுமை சிதைகின்றது என்ற தன் உணர்வு இல்லாமல் தாம் சிறு தவறுகளை விடுவதாகவும் அவை தற் செயல் நிகழ்வுகள் என கருதுவதே இறுதிவரை செம்மையான உருவாக்கம் நடைபெறாமல் போவதற்கான காரணம் ஆகும். இளையோர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இருபாலாருக்கு தனியாக ஆய்வாளர்கள் முன்வைக்கின்றனர்.

**ஆணாதிக்கத்தால் நசுக்கப்படுவது**
**செக்ஸீவல் ஹராஸ்மென்ட் மூலம் நெருக்கப்படுவது**
**பெற்றோர்களால் சுமையாகக் கணிக்கப்படுவது**
**விளம்பரப் பொருட்களாகப் பயன்படுத்தப்படுவது**
**சமுதாயத்தில் நிறைவான அங்கீகாரம் மறுக்கப்படுவது**

**தனக்கென்று தனி அடையாளம் இல்லாதது**
**பெற்றோரின் அரவணைப்பு இல்லாதது**
**பொருளாதாரப் பிரச்சனைகளால் தவிப்பது**
**பெண்களால் உதாசீனப்படுத்தப்படுவது**
**சுயமரியாதை இழப்பது**

**இளையோருக்குத் தேவையானது ஓர் அசத்தலான சுய மரியாதை:** எதிர்கொள்ளும் மனச்சஞ்சலங்களைச் சந்திக்க மற்றவர்கள் துணை நிற்பதற்கு முன்னதாக தாமே தம்மை உசுப்பிவிட்டுக் கொள்ளும் நோக்கும் போக்கும் இளையோர் ஒவ்வொருவரிடமும் வளரத்தெடுக்கப்பட வேண்டும். **“என்னால் முடியம்”** என்னும் உற்சாகம் அவர்களிலே ஊற்றெடுத்துவிட்டால், நாளைய தினங்கள் பிரகாசமாக அமைந்திடும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இருக்க வாய்ப்பில்லை! அது எப்படி? கவிக்கோ அப்துல் ரகுமானின் கருத்தாழமிகு வார்த்தைகளில்:

***”நீ சிறிய விதைதான்-- ஆனால்***
***உனக்குள் ஒளிந்து கொண்டிருக்கிறது***
***பிரமாண்டமான மரம்***
***உன் கிளைகள் நட்சத்திரங்களை நோக்கி கை விரிக்கட்டும்***

அன்றாட வாழ்வில் சந்திக்கின்ற பிரச்சனைகளிலிருந்து தப்பிக்க முயற்சிகளை மேற்கொள்கின்றார்கள் இளையோர். ஆனால் அம்முயற்சி அவர்களை மேலும் பல சிக்கல்களில் மாட்டிவிடுகின்றது. அப்படியானால் சிக்கல்கள் வரும்போது அவைகளை எதிர்கொள்வதே சாலச் சிறந்தது. அது ஏன்?

சிக்கல்கள் நமக்குப் பாடங்களாகின்றன. சிரமங்களே காலப்போக்கில் சரித்திரங்களைச் சமைத்தெடுக்கின்றன. சிலுவைகளே சிறப்புக்களைப் பிரசவிக்கின்றன

*-அன்ரோ-*

# அட, தம்பி என்ன படம் பார்கிறாய்....?

வணக்கம் தம்பி
நீண்ட இடைவெளிக்குப் பிறகெண்டாலும் நீ கடிதம் அனுப்பியிருந்தாய். உறவுகள் சுருங்கிப்போய் வெற்றுவார்த்தைகளிலும் அர்த்தமற்ற சொற்களிலும் செல்போனில் இறந்து கொண்டிருக்கிறது. இன்றைய அபாயப்பொழுதுகளில் மினக்கெட்டு கைப்பட கடதாசி எழுதியிருக்கிறாய். நன்றி.

“கடைசியாக வந்த படம் பற்றி” எழுதியிருக்கிறாய்
நீ விஜயின் இரசிகனாக இருந்து பிறந்த நாளுக்கு சொக்லட் கொடுத்தது எனக்கு ஞாபகம் வருகிறது. விஜயின் புதுப்பட முதல்நாள் படக்காட்சியில் பால்வார்த்து யாழ்ப்பாண சமூகத்தில் ஒரு புதிய கலாசார மாதிரியை நீயும் உன்ர சகபாடிகளும் அறிமுகம் செய்ததை நான் இன்னும் மறக்கவில்லை. இரத்தமும் மாரிமழையும் நிலத்தையும் பங்கர்களையும் நிரப்பிக் கொண்டிருந்த வேளை நீ திரை அரங்குக்கு முன்னால் பால் அபிஷேகம் செய்ததை என்னால் மறக்க இயலாது.

நான் நினைத்தேன் பல விடயங்கள் உன்னை பக்குவப் படுத்தியிருக்குமென்று. ஆனால் கடைசியாக வெளிவரும் மட்டரகமான படங்களைப் பர்த்து மகிழும் மட்டரகமான பார்வையாளரில் முதன்மையானவனாக இருப்பது வேதனையளிக்கிறது.

நீ நினைக்கலாம் சினிமா வெறும் பொழுதுபோக்குத்தானே, ரைம்பாசிங்தானே என்று. உண்மையில் ஒரு எல்லைக்கப்பால் நீயும் அதுவும் ஒன்றாகிப் போவாய் என்பதை மறந்து விடாதே. நீ அப்படி ஆகிவிட்டாய் என்பதை விஜயின் படங்களின் தலையை மாற்றி அருகில் நிற்பது போல் எல்லாம் நீ கொம்பியூட்டரில் வேக் பண்ணிய படங்களைப் பார்த்து அதிர்ந்து விட்டேன். நீ கணணியை ஆர்வமாய் கற்பதையிட்டு மகிழ்ச்சியடைந்த நான் உனது படங்களைப் பார்த்து மிகவும் துக்கமடைந்தேன். அண்மையில் தமிழ் திரைப்படத் துறையினர் சனல் 4க்கு ஆதரவாக நடிகர்களிடம் கையெழுத்திட்ட அறிக்கை ஒன்றின் மூலம் தமிழ் ஆதரவை புலப்படுத்தியுள்ளனர். ஆனால் அதில் உனது "கடவுள் விஜய்" உட்பட பல நடிகர்கள் கையொப்பமிட ஓடி ஒளிக்கின்றனர் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

எப்படி ஆடை ஒன்றை தெரிவுசெய்ய கடைகடையா ஏறி இறங்குகிறாயோ, உணவுப் பொருள் ஒன்றைப் பார்த்து வாங்குகிறாயோ அல்லது நல்ல புத்தகம் ஒன்றை வாங்குகிறாயோ அவ்வாறுதான் படம் ஒன்றை தெரிந்து பார்க்கப் பழகிக் கொள். நடிகர்களை வைத்து படத்தின் தரத்தை தீர்மானித்து விடாதே. அண்மையில் வெளிவந்த சில நல்ல திரைப்படங்கள் என்று கூறிக் கொள்ளக்கூடிய மைனா, ஈசன், நந்தலாலா, அழகர்சாமியின் குதிரை போன்ற திரைப்படங்களின் கதாநாயகர்கள் எவரும் வழமையான நீ வழிபடும் நபர்கள் அல்ல. கதைக்குப் பொருந்திப் போகக் கூடியவர்களை வைத்து எடுக்கப்பட்டவைகள் தான் நான் மேற்கூறிய சில படங்கள்.

உன்னை முற்றுமுழுதாக திரைப்படங்களை பார்ப்பதை தவிர் என்று கூறவில்லை. இனங்கண்டு பார்க்கப்பழகு என்று சொல்கிறேன். நல்லவற்றைப் பார்க்கப் பழகும்போது அது உனது ஆளுமையிலும் மாற்றத்தைக் கொண்டு வரும். அது உனது தலை சீவல் வடிவத்தில் இருந்து அணியும் ஆடைவரை உன்னை மாற்றும் என நம்புகிறேன்.

இறுதியாக சூப்பர் ஸ்ரார் என்று அழைக்கப்படும் ரஜனி நடித்து வெளிவந்த எந்திரன் திரைப்படம் Bicentenial man ( 1999) , Robot, Terminator I, Terminator II ஆகிய படங்களின் தொகுப்பு என்பதையும் உனக்கு ஞாபகப்படுத்துகின்றேன்.

வேறு என்ன. நல்ல திரைப்படத்தைப் பார்த்து பழக வேண்டிய சூழலில் நாம் இருக்கின்றோம் என்பதற்காகவே இம்மடல் இவ்வாறு அமைந்து விட்டது.

நான் நலம். அதுபோல் நீயும் இருக்க வேண்டுகிறேன்.

நட்புடன்
நிவேதன

**பண்பாட்டுப் பாதையில் புத்துலகை நோக்கி**

# கரவை மரியா ஆலய திறப்பு விழா



வடமராட்சியின் புகழ்பூத்த பங்காகிய கரவெட்டியின் பல்லாண்டு காலமாக எழுந்தருளி இருக்கும் பரலோக மாதாவிற்கு முன்னர் இருந்த ஆலயத்தின் பெரும் பகுதி புதிதாக கட்டப்பட்டு வழிபாட்டிற்கென ஆசீர்வதிக்கப்பட்டு ஆவணி 6ம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இவ் ஆலயத்தின் மறைமாவட்ட குருமுதல்வர் அருள்முனைவர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் திறந்து வைத்தார். 1730ம் ஆண்டு அமைக்கப்பட்ட முன்னைய ஆலயத்திற்கு போத்துக்கீசரால் மாதாவின் திருச்சொரூபம் கொண்டு வரப்பட்டது என்று சொல்லப்படுகின்றது. பின் ஒல்லாந்தர் ஆட்சியின் போது பறிகொடுக்கப்பட்டது. இந்தக் கோவில் அனேக ஆண்டுகள் கோவைக் குருமாரின் பரிபாலகத்தில் இருந்து வந்தது. 1901ம் ஆண்டு அக்கோயில் புதுப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் இங்கு பணியாற்றிய குருக்களால் சில திருத்த வேலைகள் செய்யப்பட்டன. தற்போது கூட இவ்வாலயத்தின் பெரும் பகுதிகள் குறிப்பாக நடுப்பகுதிகள் புதிதாக கட்டப்பட்டுள்ளது. இதற்கான நிதிப் பங்களிப்பு ஊர்ப்பங்கு மக்களாலும், கொழும்பில் வெளிநாடுகளில் உள்ள இவ்வாலய மககளாலும், பரலோக அன்னையின் பக்தர்களாலும் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாலய புனர்நிர்மானப் பணிகளை பங்குத்தந்தை எமில்போல் அடிகள் மிகவும் சிறப்பாக மேற்கொண்டிருந்தாரென பங்கு மக்களில் ஒருவர் பாதுகாவலனுக்கு தெரிவித்தார்.

அறிவு வளர்ச்சியில் சிறந்து விளங்கிய இப்பங்கு பல அரச உத்தியோகத்தர்களையும் உயர் பதவிகளை வகிப்பவர்களையும் கொண்டிருக்கிறது. குருக்களையும் கன்னியர்களையும் இந்தப் பங்கு காலத்திற்கு காலம் பிரசவித்துக் கொண்டே வந்திருக்கிறது.

# மாதகல் பங்கில் ஒரு வரலாற்றுத் தடாகம்

## மாதகல் பங்கின் வரலாற்றுப் பதிவுகள்

**பெ. பிரான்சிஸ்**
**(இளைப்பாறிய ஆசிரியர்)**

வரலாற்றுப் பதிவுகள் என்பவை ஒரு சமூகத்திற்கு தேடற்கரிய செல்வங்களாக அமைகின்றன. இவ்வகையில் மாதகல் பங்கின் வரலாற்றைத் தேட இருக்கும் எதிர்கால தலைமுறைக்கு உதவப் போவது "தூய தோமையார் ஆலய 125ஆம் ஆண்டு நிறைவு நினைவு மலராகும். கி.பி. 1884 - கி.பி 2009 காலப் பகுதியை உள்ளடக்கியதாக ஆக்கபட்டுள்ள இந்த நினைவு மலர் 03-07-2011 (புனித தோமையார் திருவிழா) அன்று பி.ப.6.00 மணியளவில் யாழ் மறை மாவட்டக் குருமுதலவர் அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களால் வெளியிடப்பட்டது. இந்நூலுக்கான அறிமுக உரையை அருட்பணி. அருட்செல்வன் ஆற்றினார். புனித தோமையார் ஆலயத்தைச் சார்ந்த 8 அன்பியங்கள் மேடையேற்றிய பல கலை நிகழ்வுகள் ஊடே இவ்வெளியீட்டு விழாவும் இடம்பெற்றது ஒரு புதிய அனுபவமாக இருந்தது. எமது யாழ். ஆயர் ஆண்டகையின் ஆசிச் செய்தியுடன் ஆரம்பமாகும் இம்மலர் புனித தோமையார் ஆலய வரலாற்றுடன் பங்கிலுள்ள ஏனைய ஆலயங்களின் வரலாற்றுச் சுருக்கங்களையும் உள்ளடக்கியுள்ளது. புனித தோமையார் வாழ்வில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள், அவரின் மறைத்தூதுப்பயணம் என்பன வாசகங்களுக்கு பல தகவல்களை வழங்கியுள்ளன. மேலும் "மாதகல் பங்கில் இருந்து இறைபணிக்கு தம்மை அர்ப்பணித்தோர்"என்ற பகுதி இளம் உள்ளங்களில் "தேவ அழைத்தல்" என்ற விதையை விதைக்கும் ஒரு செயற்பாடாகக் காணப்படுகின்றது. பக்திச்சபைகள் பணிகளில் பங்கேற்கும் பொது நிலையினர் பற்றிய தகவல்கள் மாதகல் பங்குத் திருச்சபையின் பணிகளில் பொது நிலையினரின் பங்கேற்பை மேலும் அதிகரிக்கும், ஊக்குவிக்கும் ஒரு முயற்சியாக பரிணமித்துள்ளது.

ஒட்டு மொத்தமாக இந்த மலர் மாதகல் பங்கிற்கு ஒரு வரலாற்றுத் தடாகமாக அமைகிறது என்றால் அது மிகையாகாது. இம் மலரைப் பிரசவிப்பதில் தமது அர்ப்பணிப்புடன் கூடிய பங்களிப்பை வழங்கிய சகல பணியாளர்களுக்கும் குறிபபாக மலரைத் தொகுத்த மறையாசிரியர் திரு. கி.சா.பங்கிராஸ் அவர்களுக்கும், எல்லா நிகழ்வுகளையும் நெறிப்படுத்திய பங்குத்தந்தை அருட்பணி S.M.P ஆனந்தக்குமார் அடிகளாருக்கும் பாராட்டுக்களும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

# திருவிவிலிய தூதுப்பணிக் கருத்தரங்கு

யாழ் மறைமாவட்ட மறைக்கல்வி நிலையமும் யர்ழ் மறை மாவட்ட பொது நிலையினர் கழகமும் இணைந்து நடாத்தும் திருவிவிலிய தூதுப்பணி எனும் கருத்தரங்கு எமது மறை மாவட்டத்தின் ஒவ்வொரு மறைக்கோட்டத்திலும் ஆவணி 22ம் திகதி முதல் 30ம் திகதி வரை நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கை நெறிப்படுத்த தோழன் ஆசிரியர் "அருட்பணி மரிய டெல்ஸ்" அவர்கள் வருகைதரவிருக்கின்றார். இக்கருத்தரங்குகளில் பங்குபற்ற விரும்புவோர் பங்குத்தந்தையருடன் தொடர்பு கொண்டு கருத்தரங்குகளில் பங்குபற்றி பயனடையவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| குருக்கள் துறவிகள் (ஆயர் இல்லம்) | - | 22.08.2011 | - | 9.00 - 12.00 |
| நெடுந்தீவு | - | 22.08.2011 | - | மாலை 5.00 முதல் |
| | | 23.08.2011 | - | 9.00 - 1.00 |
| இளவாலை | - | 24.08.2011 | - | 9.00 - 4.00 |
| பருத்தித்துறை | - | 25-26.08.2011 | - | 9.00 - 4.00 |
| யாழ்ப்பாணம் | - | 27.08.2011 | - | 9.00 - 4.00 |
| கிளி/முல்லை | - | 28-29-30.08.2011 | - | 9.00 - 4.00 |


## திருமண வாழ்வில் பொன்விழா வாழ்த்து



**திரு. திருமதி யேசுதாசன் தம்பதியினர்**

இறைவன் இணைப்பில் 50 ஆண்டுகள் நிறைவை 2011-08-23ல் பொன்விழாவாகக் கொண்டாடும் திரு திருமதி யேசுதாசன் லில்லி திரேசா தம்பதியினருக்காக இறைவனுக்கு எம் நன்றிகளைக் கூறிநிற்பதோடு, பொன்விழா தம்பதியினர் உடல் உள ஆன்மீக பலத்துடன் நீண்ட பல ஆண்டுகள் வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.

பிள்ளைகள்.
மருமக்கள்.பேரப்பிள்ளைகள்,
சகோதரிகள் சகலர்.

இல 63. மருதடி வீதி
யாழ்ப்பாணம்.

Advt-62/11

## துன்னாலை சதா சகாய மாதா ஆலய திருவிழா நாள் மாற்றம்

புரட்டாதி இரண்டாம் ஞாயிறு (11-09-2011) நடைபெற்று வரும் மேற்படி ஆலய திருவிழா தவிர்க்க முடியாத காரணத்தால் இவ்வாண்டு புரட்டாதி 18-09-2011 ஞாயிறு அன்று காலை 6.30 மணிக்கு நடைபெறும்.

தகவல்: பங்குத்தந்தை-கரவெட்டி
ஆலய அருட்பணிச் சபை

Add 60/11

## 13ம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 10-10-1924
விண்ணில் 25-08-1998

"உயிர்ப்பும் உயிரும் நானே"

முகமுகமாய் இறைவனைத் தரிசித்துக்
கொண்டிருக்கும் எம் தந்தையே
உம் உறவுகள் நாம் நோய், பிணி இன்றி
நலமே இவ்வுலகில் வாழ இறைவனிடம்
மன்றாட வேண்டுகிறோம்.

சுவாம்பிள்ளை பற்றிக்

1/14 1ம் ஒழுங்கை
புதுவீதி கொய்யாத் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
மனைவி மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

Add-61/11


# 17 ஆண்டுகளிற்கு பின் கிளாலி புனித யாகப்பர் திருத்தல திருவிழா



கிளாலி புனிய யாகப்பர் ஆலயம் யாழ் மறைமாவட்டத்தின் மிகப் பழைமை வாய்ந்த யாத்திரை ஸ்தலமாகும். இவ்வாலய திருவிழாவானது கடந்த 17 ஆண்டுகளிற்கு பிற்பாடு 30.07.2011 அன்று கொண்டாடப்பட்டது. இவ்வாலயமானது பெருமளவு சேதமுற்றிருந்த போதிலும் அடிப்படை புனரமைப்பு வேலைகள் செய்யப்பட்டன. இப்பகுதி மீள்குடியேற்றம் செய்யப்படாத பட்சத்திலும் அப்பகுதி இராணுவத்தின் உதவியுடனும், ஆலய மக்களின ஒத்துழைப்புடனும் அருட்பணி பத்திநாதர் அடிகளாரின் தலைமையில் ஆலய திருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. அருட்பணி றேஜிஸ் இராசநாயகம தலைமையில் திருவிழா கூட்டுத் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டது. பல்வேறு இடங்களில் இருந்தும் மக்கள் இத்திருவிழாவில் கலந்து கொண்டனர். பல ஆண்டுகளிற்கு பின்னர் அவ்விடத்திற்கு வருகை தந்த அவ்வூர் மக்கள் தங்கள் சொந்த இடங்கள் முற்றாக சேதமுற்றிருந்ததை பார்வையிட்டு மனம் வருந்தினார்கள். மிக விரைவில் தங்கள் சொந்த இடங்களில் வாழவேண்டும் என்று மன்றாடினார்கள்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.



# பாலியல் கல்வி கற்பிப்பதற்குப் பெற்றோருக்கு இருக்கும் உரிமையைத் திருப்பீடம் ஐ.நா.வுக்கு நினைவுபடுத்துகிறது

இளையோர் குறித்த ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் கொள்கைகள், மனிதப் பாலியல் கூறுகள், இனவிருத்தி நலவாழ்வு உள்ளிட்ட விவகாரங்களில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிப்பதற்குக் கொண்டிருக்கும் உரிமையை மதிபபதாய் இருக்க வேண்டும் என்று திருப்பீட அதிகாரி ஒருவர் கூறினார்.

இளையோர் குறித்த ஐ.நா. நிறுவனத்தின் உயர்மட்ட அளவிலான கூட்டத்தில் இவ்வியாழனன்று உரையாற்றிய, ஐ.நா.வுக்கானத் திருப்பீடத்தின் நிரந்தரப் பார்வையாளர் பேராயர் பிரான்சிஸ் சுள்ளிக்காட், பிள்ளைகள், ஒழுக்க நெறி சார்ந்த பொறுப்புணர்வையும் பிறரை மதிக்கும் நற்குணத்தையும் குடுமபங்களில் கற்றுக் கொள்கின்றனர் என்றார்.

வன்முறையும் பிளவுகளுமற்ற, அதேவேளை அமைதியும் நல்லிணக்கமும் கொண்ட சமுதாயச் சூழலில் ஒவ்வோர் இளைஞனும், யுவதியும் வளர்க்கப்பட வேண்டும் என்பதையும் பேராயர் வரும் ஆகஸ்டில் மத்ரித்தில் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் தலைமையில் நடக்கும் உலக இளையோர் தினம், மனிதன் குறித்த உண்மையில் வேரூன்றப்பட்டுள்ள ஆன்மீகக் கூறுகளின் முக்கியத்துவத்தை இளையோர் கற்றுக் கொள்ள உதவுவதாக இருக்கும் என்ற தனது நம்பிக்கையையும் தெரிவித்தார்.

ஆகஸ்ட் 18 முதல் 21 வரை மத்ரித்தில் நடைபெறும் 13வது உலக இளையோர் தினத்தில் பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட இளையோர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சக்கோட்டை பங்கில் உறுதிப்பூசுதல்

கடந்த வாரம் சக்கோட்டை பங்கில் உறுதிப்பூசுதல் திருச்சடங்கு யாழ். ஆணடகையினால் நிறைவேற்றப்பட்டது. இச்சடங்கில் பொலிகண்டி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, சக்கோட்டை பங்குகளில் இருந்து 260க்கு மேற்பட்ட இளையவர்களுக்கு உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கபபட்டது. 2005ம் ஆண்டுக்கு பின் இப்போதுதான் நடைபெற்றமையினால் கூடுதலான எண்ணிக்கையில் மாணவ மாணவியர்கள் இருந்ததாகவும் அவருககான முன்னாயத்த வகுப்புக்கள் கடந்த நான்கு மாதங்களாக வழங்கப்பட்டதாகவும் பங்குத்தந்தை அருட்பணி. அகஸ்ரின அடிகளார் பாதுகாவலனுக்கு தெரிவித்தார்.

திருச்சடங்கின் நிறைவில் ஆயர் மாணவ மாணவியரிடம் வினாக்கள் கேட்டு பதில் கூறியோருக்கான பரிசில்களையும் வழங்கினார். இறுதியாக பங்குமக்களையும் ஆயர் சந்தித்து உரையாற்றினார். நாளின் அனைத்து நிகழ்வுகளையும் திறமையாக பங்குத்தந்தை ஒழுங்குசெய்திருந்தார்.

# நாடுகளில் பெண்களின் உரிமைகள் நசுக்கப்படுவது தொடர்கின்றது - ஐ.நா.

பெண்களின் உரிமைகள் மதிக்கப்படுவதில் சில நாடுகளில் முன்னேற்றம் தெரிந்தாலும் அவர்களின் மனித உரிமைகள் கட்டுப்படுத்தப்படும் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம் பெறுவதாக ஐ.நா. அறிவித்தது.

பெண்களுக்கு எதிரானப் பாகுபாடுகள் ஒழிப்பு ஒப்பந்தம் குறித்து நடைபெற்ற ஐ.நா. கூட்டம் பற்றி நிருபர்களிடம் தெரிவிதத இந்த ஒப்பந்தக் கமிட்டித் தலைவர் சில்வியா பிமெண்டல், இத்தாலி, எத்தியோப்பியா. நேபாளம், சிங்கப்பூர், ஜாம்பியா, கோஸ்ட்டாரிக்கா, கொரியக் குடியரசு ஆகிய நாடுகளில் சேகரித்த விபரங்களின் அடிபபடையில் அறிக்கை வெளியிடப்பட்டது என்றார்.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்செயலைத் தடுப்பதற்குச் சட்டங்கள் இல்லையென்ற அவர், சில நாடுகளில் குழந்தை பிறப்பின் போது தாய்மார் இறப்புகள் அதிகம் இடம் பெறுவது குறித்துக் கவலையையும் தெரிவித்தார்.

# தாய்ப்பால் கொடுக்கும் பழக்கம் 40 விகிதக் குறைவு

குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்கும் பழக்கம், கடந்த 5 ஆண்டுகளில் கணிசமாகக் குறைந்துள்ளது என ஐ.நா.வின் குழந்தை நல அமைப்பான யுனிசெப் அறிவிக்கிறது.

யுனிசெப் நிறுவனம் கடந்த ஆண்டு நடத்திய ஆய்வில், 40 வீதப் பெண்களே 6 மாதங்கள் வரை, தாய்ப்பால் கொடுக்கின்றனா் எனத் தெரியவந்துள்ளது.

ஆகஸ்ட் முதல் வாரத்தை தாய்ப்பால் விழிப்புணர்வு வாரமாக ஐ.நா. கடைபிடித்து வருவதையொட்டி ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்ட யுனிசெப், ஆறு மர்தங்கள் வரை துணை உணவு இல்லாமல், தாய்ப்பால் மட்டுமே கொடுக்கும் பெண்களின் எண்ணிக்கை 20 வீதம் தான் என்று கூறியது.

"பிறந்த குழந்தைகளுக்கு தாய்ப்பால் சிறந்த மருந்து; தாய்ப் பால் கொடுப்பதால், நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. அறிவுத்திறன் மேம்படுகிறது. இதனால் பிறந்த ஒரு மணி நேரத்துக்குள், தாய்ப்பால் கொடுப்பதால் பச்சிளம் குழந்தை இறப்பு விகிதம், 20 விகிதம்வரை குறைகிறது" எனப் பல்வேறு ஆராய்ச்சிகளில் கண்டுபிடிக்கப்பட்டன.

ஒவ்வோர் ஆண்டும் இந்தியா உள்ளிட்ட 120 நாடுகளில் ஆகஸ்ட் முதல் வாரம், தாய்ப்பால் வாரமாக அனுசரிக்கப்படுகிறது.

தாய்ப்பால் கொடுக்கும் பழக்கம் 1998ம் ஆண்டில் 50 விகிதமாகவும், 2005ல் 55 விகிதமாகவும் உயர்ந்தது. ஆனால். கடந்த ஆண்டு, தாயப்பால் கொடுக்கும் பழக்கம் 40 விகிதமாகக் குறைந்திருப்பது தெரிய வந்துள்ளது.

## நூல் வெளியீடு
## ஆசிரியத்தலையங்கம் ஆர் அறிமுகம்

திகதி: 19-08-2011 நேரம்: மாலை 3.00

இடம்: பிசப் சவுந்தரம் மீடியா செனர்ர், இல 891, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.




பிரதம விருந்தினர்
பேராசிரியர் கி. விசாகருபன்
தலைவர் தமிழ்த்துறை கலைப்பீடம்
யாழ்பல்கலைக்கழகம்

ஆய்வுரை 1
கிருத்திகா தர்மராஜா

ஆய்வுரை 2
ந. விஜயசுந்தரம்
பிரதம ஆசிரியர் வலம்புரி பத்திரிகை

இறைவணக்கம் : புளோரன்ஸ் சூசைதாசன்

பத்திரிகையாளர் பாதுகாவலன்
தலைமையுரை : பி. றெஜிஸ் நியூட்டன்
ஆசிரியர் மன்னா : மூன்றாம் பிட்டி
அ. த. க. பா மன்னார்
இணைப்பாளர் பிசப் சவுந்தரம்
மீடியா செனர்ர்.

ஆசியுரை சிறப்பு விருந்தினர்
நூல் வெளியீடு : ஆய்வுரை
பிரதம விருந்தினர் உரை
ஏற்புரை: அருள் திரு ருபன்
மரியாம்பிள்ளை

நிறுவுனர் - இயக்குநர் பிசப் மீடியா
சென்ர் - ஊடக விரிவுரையாளர்
யாழ் பல்கலைக்கழகம்
நன்றியுரை: எம். நியூட்டன்
ஊடகவியலாளர் வீரகேசரி

## இலங்கை அரசு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கான எவ்வித செயல்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனக் குறை கூறினார்.

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குரு மடத்தின் இறையியல் துறைத்தலைவர் அருள்முனைவர் மங்களராஜா அடிகள் யாழ்ப்பாணத்தில் பேச்சு சுதந்திரம் காணப்படவில்லையெனவும், மக்கள் அச்சத்தில் வாழ்வதாகவும் தெரிவித்தார்.

## தமிழருக்கு உதவி

தமிழகத்தில் அகதிகள் முகாமில் வசிக்கும் இலங்கை தமிழர்கள் 5,500 பேருக்கு மாதம் தோறும் ஆயிரம் ருபாய் நிதியுதவி வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

## வரலாற்றை வடிவமைப்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திகதி முதல் 21ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

எமது மறைமாவட்டத்திலும் இம் முறை இந் நாளை சிறப்பாக அனுசரிக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. விழிப்புணர்வுப் பாடல், கிராமிய நடனம். வீதிநாடகம் ஆகிய போட்டிகள் இளையோர் மன்றங்களிடையே நடாத்தப்பட்டன. பங்குகள் தோறும் இளையோர் சிலுவை பவனி வருகிறது. விழிப்புணர்வைத் தூண்டும் கொடிவாரம் இடம் பெறுகின்றது. அனைத்துக்கும் சிகரம் வைப்பது போல 21ம் திகதியன்று மாலை மாபெரும் இளையோர் சங்கம நிகழ்வு நடைபெறுகின்றது. எமது மறைமாவட்ட இளையோர் மட்டும் அல்ல திருமலை, மட்டுநகர், மன்னார் மறைமாவட்டங்களின் இளையோர் பிரதிநிதிகளும் பங்கு கொள்கின்றனர் அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெறும் திருபபலியைத் தொடர்ந்து பிரதான வீதி வழியாகப் புறப்படும் பேரணி யாழ் பேராலயத்தை அடையும். அங்கு பல கலை நிகழ்வுகளும் விடியல் இசைக்குழுவின் இன்னிசை நிகழ்வும் இடம் பெறவிருக்கின்றன. இவற்றில் கலந்து கொள்ள அனைத்து இளையோரையும் அன்புடன் அழைககின்றோம்.

பண்பாட்டும் பாதையில் புத்துலகு நோக்கி... என்ற இலககு வாக்கோடு முன்னெடுக்கப்பட்ட வரும் எமது ஆணைக் குழுவின் இளையோர் உருவாக்க செயற்பாடுகளில் பரந்துபட்ட வகையில் பங்களிப்பையும் கோரி நிற்கின்றோம். கையறு நிலையில் இருக்கும் ஈழத் தமிழ் மக்களின் வாழ்வு மீண்டும் செழிப்பதென்பது இன்றைய இளையோரின் கையில் தான் தங்கியிருக்கின்றது. ஆகவே தான் எமது பண்பாட்டில் ஊன்றி அடித்தளமிட்டு புதியதொரு உலகை நோக்கி பயணிக்க வேண்டுமென எமது இளையோரை கோரி நிற்கின்றோம்.

**வாருங்கள் வடம் பிடிப்போம்
வானம் வசமாகும்
எமக்கென ஒரு வரலாற்றை
நாமே வடிவமைப்போம்.**

## ஆயர் பேரவையின் பிரதிநிதிகள் தென்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நீண்ட காலமாக வெள்ளையர், கறுப்பினர் என்ற கடுமையான பாகுபாட்டை வெள்ளையர் அரசு இராணுவ வல்லமையுடன் நடாத்தியதையும் காந்தி மகான் முதல் நெல்சன் மண்டேலா வரை இதற்குக் காட்டிய எதிர்ப்பும், அரசாங்கத்தின் அடக்கு முறை பற்றி அறியவும் 15 வருடங்களிற்கு முன் உண்மையான ஒப்புரவின் மூலமாக அவர்கள் மத்தியில் நிகழ்ந்த அற்புத நல் இணக்கத்தையும் அறிய முடிந்தது என்றார் ஆயர் அவர்கள்.

அவர் மேலும் கூறுகையில் நீண்டகால துன்பம் மிக்க அடக்கு முறையினால் பாதிக்கப்பட்ட கறுப்பு, வெள்ளை இனத்தவர் தமது துன்பியல் நிகழ்வுகளை அச்சமின்றி வெளிப்படுத்தினர். ஒருவர் ஒருவரை தண்டிக்கவோ பழி வாங்கவோ அல்ல மாறாக ஏற்றுக்கொண்டு புரிந்துணர்வுடன் நடக்க முற்பட்டனர். இச் செயற்பாட்டால் இரு பகுதியினர் மத்தியிலும் நல்லிணக்கமும், புரிந்துணர்வும் ஏற்பட்டது. இதனால் இன்று இரு சமூகங்களும் ஓர் மனதுடன் புதிய தென்னாபிரிக்காவை கட்டியெழுப்ப முடிந்துள்ளது.

இதற்காக உழைத்த அறிஞர்கள், சமூகநல விரும்பிகள், கத்தோலிக்க ஆயர் பேரவை, கிறிஸ்தவ பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்ற பெரியவர்களை சந்தித்து அவர்களின் கருத்துக்களையும் அனுபவங்களையும் கேட்டறிந்து கொண்டோம்.

அத்தோடு அங்கிருக்கும் இனப்பிரிவினையைச் சித்தரிக்கும் காட்சியகங்கள், தேசிய நினைவுச் சின்னங்கள், உள்ளூர் நினைவுச் சின்னங்கள், மக்கள் குடியிருப்புக்கள், பேராலயங்களையும் பார்வையிட்டு விடயங்களை அறிந்து தெரிந்து கொண்டோம்.

இதன் இறுதியில் கண்டதையும் கேட்டதையும் ஆழ்ந்து சிந்தித்து எப்படி எம் நாட்டிலும் பெருபான்மை, சிறுபான்மையினர் மத்தியில் நல்லிணக்கத்தை கொண்டுவர முடியும் என்றும் சிந்திக்கவும், செயறபடவும் இப்பயண அனுபவம் வழி சமைத்ததாக ஆயர் அவர்கள் பாதுகாவலனுக்கு தெரிவித்தார்.

## திருப்பலி ஆடைகள் விற்பனைக்கு

பாதுகாவலன் விற்பனை நிலையத்தில் திருப்பலிக்கான ஆடை வகைகள் விற்பனைக்கு உண்டு. உங்கள் தேவைக்கேற்ப ஓடர் கொடுத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

* மோட்சபாதையும் விற்பனைக்கு உண்டு விலை 450.00

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2011 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.